உ

சிவமயம்.

# தங்கச் சுரங்கம்.

[வதிரி ஐக்கிய சப்பாத்துத்
தொழிற்சாலைச் சங்கம்.]

★

எழுதியவர்:

**வதிரி A. M. வடிவேல்.**

★

வெளியிட்டோர்:

**திரு. S. V. ஆழ்வார்ப்பிள்ளை அவர்கள்**

**திரு. சு. மாணிக்கம் அவர்கள்**

---

கலாநிதி யந்திரசாலை—பருத்தித்துறை.

1955.

சிவமயம்.

# தங்கச்சுரங்கம்.

[வதிரி ஐக்கிய சப்பாத்துத்
தொழிற்சாலைச் சங்கம்]

★

எழுதியவர்:

**வதிரி A. M. வடிவேல்**

★

வெளியிட்டோர்:

**திரு. S. V. ஆழ்வார்ப்பிள்ளை அவர்கள்**
**திரு. க. மாணிக்கம் அவர்கள்**

## அர்ப்பணம்.

பிரயாண வசதிகள் சிறிதுமற்ற காலத்திலே புலி, கரடி, யானை முதலிய கொடிய மிருகங்கள் வாழும் பயங்கரமான வனங்களை ஊடறுத்துக் கால் நடையாய்த் தென்னிலங்கை சென்று பாதரட்சைத்தொழில் ஆகிய "**தங்கச்சுரங்க**"த்தைக் கண்டு பிடித்து, அதன்மூலம் எமது சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தகையாளனை முதல் மனிதனின் பாத கமலங்களுக்கு.

சிவமயம்.

# "தங்கச்சுரங்கம்."

## தோற்றுவாய்.

ஒரு கிராமம் முன்னேறவேண்டுமானால், முக்கியமாய் அதன் பொருளாதார வளம் மேலோங்க வேண்டும். வதிரி என்ற பெயருடைய எமது கிராமம் சுமார் 60 வருடங்களாய் பாதரட்சை உற்பத்தி செய்யுந் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளது. இன்றைய நாகரிக உலகில் மிகவும் முக்கியத்துவமும், மதிப்பும் வாய்ந்தது இந்தத் தொழில். அடிமைப் பட்டுக்கிடந்த எமது கிராமம் சுதந்திரத் தன்மை நிறைந்த இந்தத் தொழிலால் சிறிது சிறிதாய் விழிப்படைந்தது. இலங்கையின் பல பாகங்களுக்கும் தொழில் முயற்சி காரணமாய்ச் சென்ற நம் முன்னோர், அவ்விடத்து நாகரிகங்களையும், பண்பாடுகளையும் அறிந்து வந்து பல எதிர்ப்புகளுக்கு மிடையே எமது கிராமத்தில் புகுத்தினர். அந்தக் காலத்தில் கல்வியறிவு குறைவாயிருந்தாலும், கேள்வியறிவால் பல விஷயங்களையுமறியலாயினர். அதுகாரணமாய்ச் சுதந்திர உணர்ச்சி, சீர்திருத்த உணர்ச்சி முதலியவற்றால் உந்தப்பட்டனர். அன்று சிறு, சிறு பிரச்சினைகளையெல்லாம் எதிர்த்து அஞ்சாது போராடியதால்தான், இன்று நாம் பெற்றுள்ள மனிதஉரிமைகள் யாவும் கிடைத்துள்ளன. இவையனைத்துக்கும் மூலகாரணம் எமது தொழிலன்றி வேறல்ல. அடிமைத்

தனமோ, பிறரை அண்டிப் பிழைக்கும் நிலைமை யோ இந்தத் தொழிலுக்கு இல்லை. அதுவுமன்றிக் கூடுதலான வருவாயுமுள்ளது.

எமது கிராமத்திலேற்பட்ட சுதந்திர உணர்ச்சி அயல் கிராமங்களுக்கும் பரவி எமது சமூகத்துக்கே ஒரு பெரும் விழிப்புணர்ச்சியைக் கொடுத்தது. இதன் பலாபலன்கள் அனைத்தும் இன்று எம்மால் அநுபவிக்கப்பட்டுவரு கின்றன. இப்படிப்பட்ட மாபெரும் சாதனைகளுக் கெல்லாம் உறுதுணையாயிருந்த எமது தொழிலை நாம் புறக்கணித்து விடமுடியாது. எந்த ஒரு கிரா மத்துக்குமில்லாத வரப்பிரசாதம் போன்ற மேற் படி தொழிலை அபிவிருத்திசெய்து, அதன் மூலம் எமது கிராமப் பொருளாதாரநிலையை உயர்த்த முயற்சிப்பதே இச் சிறு கட்டுரையின் முக்கிய நோக்கம்.

அன்று எப்படி இந்தத் தொழிலை நாம் செய்து வந்தோமோ அதுபோலவே இன்றும் செய்து வருகிறோம். ஏதாவது பெருமளவு அபி விருத்தி ஏற்படவில்லை. ஏற்படுத்தப் பலர் பல தடவைகள் முயன்றும் பயனற்றுவிட்டன. இன் றைய நவீன சாதனங்களையும், விஞ்ஞான அறி வையும் பயன்படுத்தினால் நாட்டிலே செல்வம் செழிக்கச் செய்யலாம். நாட்டை நகராக்கலாம். வீட்டைச் சொர்க்கமாக்கலாம்.

பாட்டா, ஜோன்வைட், லெனுட்ஸ் போன்ற மே லைட்டு மேதைகள் தங்கள் சுய முயற்சியால் கோ

டீஸ்வரர்களாய் இன்று விளங்குகிறார்கள். அவர்கள் செய்வது என்ன? **பாதரட்சைத் தொழில்தானே!** மேற்படி மேதைகளின் நல்லெண்ணமும், நல்முயற்சியும் எத்தனையோ லட்சக்கணக்கான மக்களை வாழவைத்துள்ளது கண்கூடு. உலகம் முழுவதும் பெரும் தொழிற்சாலைகளையமைத்துப் பணியாற்றி வரும் **பாட்டா.** கல்கத்தாவிலே நாற்பது மைல் விஸ்தீரணமான ஒரு கிராமத்தைச் சீர்செய்து அதற்கு **பாட்டாநகர்** எனப் பெயரளித்து அங்கு ஓர் மாபெரும் தொழிற்சாலையை அமைத்துள்ளார். அங்கு சுமார் **பதினோராயிரம்** தொழிலாளிகள் பணிபுரிவதாய்க் கேள்விப் படுகிறோம்.

## தொழிலாளர்.

"காடாறுமாசம், நாடாறுமாசம்" என்ற விக்கிரமாதித்த நிலையிலேதான் எமது தொழிலாளிகள் இருக்கிறார்கள். நுணுக்கமாய் ஆராய்ந்தால் வருடத்தில் நான்கு மாதங்களே வேலைசெய்கிறார்கள். இந்த நான்கு மாத வருமானத்தைக்கொண்டே மிகுதி எட்டு மாதச் செலவினங்களையும் நிர்வகிக்க வேண்டியுள்ளது. தினம் **பத்து ரூபா** உழைக்கும் திறமைபெற்ற தொழிலாளி வருடமுடிவிலே கடனைத்தான் சுமந்து நிற்கவேண்டியதா யிருக்கிறது. இந்த இழிநிலை மாறவேண்டும். தினசரி வருமானம் பெறக்கூடிய ஒரு நல்ல நிலை ஏற்பட வேண்டும். அப்பொழுது தான் தொழிலாளர் பொருளாதாரத்தைச் செப்பனிட முடியும்.

அதற்கு உள்ளூரிலே ஒரு தொழிற் சாலையை அமைத்துப் பணி புரியவேண்டும்.

எமது கிராமத்திலே சுமார் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட நல்ல தொழிலாளிக ளிருக்கின்றனர். தொழில்நுட்பத்துறையில் மிகவும் திறமைவாய்ந்த வர்களுமுண்டு. இன்று இலங்கையில் வெளிநாடுக ளிலிருந்து இறக்குமதியாகும் சப்பாத்துகளின் தரத்துக்கு இணையாய் உற்பத்திசெய்யும் திறமை வாய்ந்தவர்களுமுண்டு. ஆனால் மேற்படி சக்திகளை ஒன்றுதிரட்டிப் பயன்படுத்த எமது ஒற்றுமையும், ஊக்கமும், சலியா உழைப்பும் வேண்டும். தினசரி பத்து ரூபா உழைத்த நல்ல தொழிலாளிகள் தேக சக்திகுன்றிய வயோதிபநிலையில் மிகவும் வறுமை யை அனுபவித்துக் கஷ்டப்பட்டதை நாம் கண் ணூரக்கண்டும் வாழாவிருப்பது வெட்கப்படவேண் டிய விஷயம். இவை யாவும் எமது கிராமப் பொரு ளாதார வளத்தை மிகவும் பலவீனப் படுத்துகின் றன. ஆகவேதான் நாம் ஆவன செய்தே தீருவ தென்ற தீர்மானத்துக்கு உடனடியாய் வரவேண் டியவர்களாயிருக்கிறோம்.

## தேவை.

இன்றைய நாகரிக உலகின் தேவைகளிலே பாதரட்சை ஒரு முக்கிய அம்சம். 75 வீதமானோ ரின் தவிர்க்கமுடியாத ஒருதேவை. எனவே திட்ட மிட்டுச் செய்தால் வெற்றி காணலாம். இலட்சக்

கணக்கான ரூபாய்களைக் கொட்டி வெளிநாடுகளி லிருந்து இறக்குமதிசெய்யும் எமது அரசாங்கதே வையில் பத்திலொரு பங்கையாவது நாம் உற் பத்திசெய்து தரமுடியும். ஆனல் கையில் வெண் ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த வன்போல், செல்வம் கொழிக்கும் தொழிலைக் கையிலே வைத்துக்கொண்டு வறுமைப் பிணியை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

## முதலாளிகள்.

தொழிலாளிகளாயிருந்த பலர் இன்று முத லாளிகளாக மாறி, இலங்கையின் பல பாகங்களி லும் பரந்து வியாபார ஸ்தாபனங்களை உண்டு பண்ணி நடத்துகிறார்கள். நிலைமையும், பெயரும் மாறியதேயன்றி, பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்களெதுவும் ஏற்பட்ட தாய்த் தெரியவில்லை. நிலைமைமாறியதால் வாழ்க் கைத்தரம் கூடியது. செலவினங்களும் கூடியது அந்தஸ்தைக் காத்துக்கொள்வதற்காய்க் கடன் சுமையும் ஏறலாயிற்று. இன்று இலங்கைமுழுவ தும் சுமார் 32 கடைகள் எமது கிராமத்தாரால் நடத்தப்படுகின்றன. அதில் ஒரு சில கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகள் யாவும் போதிய மூதலீ டின்றி ஆதாயத்தைப் பெருக்க முடியாது திணறு கின்றன.

மத்திய தொழில் நிலையமாய் ஒரு தொழிற் சாலை உள்ளூரிலே இயங்குமானல் மேற்படி கடை

கள் அனைத்தையும் ஆதாயம் கொழிக்கச் செய்ய முடியும். இன்னும் பல முதலாளிகளையும் உற்பத்தி செய்ய முடியும். அதன்மூலம் எமது கிராமத்தையும் சுபிட்சமடையச் செய்யமுடியும்.

## இன்று எமது கிராமநிலை.

இன்று எமது கிராமம் ஒரு பள்ளிக்கூடத்தையும் சனசமூக நிலையத்தையும், மாபெரும் ஆலயத்தையும் நிர்மாணித்தது மட்டுமன்றி, திறம்பட நிர்வகித்தும் வருகிறது. பல முதல்தரமான வீடுகளும், கிணறுகளும் அலங்கரிக்கின்றன எமதுகிராமத்தை. எனினும் நாம் பரம திருப்தியடைந்துவிட முடியாது. பொருளாதார அபிவிருத்தியில், விரிவானமுறையில் பின்வரும் திட்டப்படி முயன்றிருந்தால், இன்றுள்ள இந்த நிலையிலும் பார்க்க பலமடங்கு விசேடித்த நிலையில் எமதுகிராமம் இருக்குமென்பதைத் துக்கத்துடன் குறிப்பிட வேண்டியவனாயிருக்கிறேன். பரவாயில்லை. வீணே கழிந்த நாட்களை விட்டு விடுவோம். கழிவிரக்கப்படுவதால் பயனில்லை. இனியாவது எமது முயற்சியில் ஒற்றுமையுடன் முயன்று பார்ப்போம். ஆழ்ந்த அநுபவம் பெற்றுவிட்ட நாம் மனப்பண்பை மட்டும் ஒன்றுபடுத்திக் காரியத்தில் முயன்றால் வெற்றிபெறுவதை எந்த சக்திகளாலும் சிதைத்துவிட முடியாது. இது நிச்சயம்.

## பிறநாட்டு வாழ்க்கை.

அநேகமாய் பாதரட்சைத் தொழிலை வைத்து நடத்தும் கடைகளும், சின்னஞ்சிறு தொழிற்சாலை

களும் பட்டினங்களிலேயே இருப்பதால், தொழிலாளர் அனைவரும் பட்டினவாசிகளாகவே இருக்க வேண்டியுள்ளது. பட்டினவாசம் ஆடம்பரமான பல செலவுகளுக்கும் ஆஸ்பதமாயிருக்கிறது. போக்கு வரவுச் செலவுகளும், பல வீணான விரயங்களுமேற்படுகிறது. இந்தச் செலவுகள் யாவற்றையும் தொழிலாளி தனது உழைப்பைக் கொண்டே நிர்வகிக்க வேண்டியதாயிருக்கிறது. மேலும் நகர வாழ்வு வருவாய் குறைந்தோற்கு நரகவாழ்வு. கொழும்பில் சேரிபோன்ற இடங்களிலேயே பெரும்பாலான வேலைத் தலங்களிருக்கின்றன. போதிய வெளிச்ச வசதியோ, காற்று வசதியோ ஏனைய சுகாதார வசதிகளோ சிறிதுமின்றி சுமார் 15 மணித்தியாலங்கள் உழைக்கும் தொழிலாளரைப்பற்றி சற்றே சிந்தித்துப்பார்க்கவேண்டாமா? இவ்வளவு கஷ்டப்படும் தொழிலாளர் சிரம பரிகாரம்செய்ய நல்ல படுக்கை வசதியாவது உண்டா? மூட்டைப்பூச்சி, தெள்ளு முதலியவற்றின் பயங்கரத்தாக்குதல்களுக்குப் பயந்து இரவு ஒரு மணிவரை உடலைக்கசக்கிப் பிழிந்து அலுத்துக் களைத்து, சோர்ந்து, அசந்துபோனநிலையிலேயே நித்திரைக்குப் போக வேண்டியதா யிருக்கிறது. இந்த நிலைமை எமது தொழிலாளரின் உடல் நலத்தைப் பெரிதும் பாதித்து இளமையிலேயே முதுமையைத் தழுவச் செய்கிறது. தமது உடல் வருத்தத்தைக் குறைப்பதற்குக் குறுக்குவழியில் பிரவேசித்துக் குடிப் பழக்கத்தையும் பெற்றுவிடுகிறார்கள் சிலர். அந்தோ! பரிதாபம்!!

உள்ளூரிலே வேலை கிடைக்குமாயின் பல்வேறுன வீண் செலவுகள் தவிர்க்கப்படுகின்றன. நல்வாழ்வு கிடைக்கிறது. ஊக்கமுள்ள ஒருதொழிலாளியால் வருடத்தில் இரண்டு மாதங்கள் ஓய்வெடுத்தாலும், குறைந்தபட்சம் பத்துமாதங்கள் ஒழுங்கான உற்பத்தியில் ஈடுபட முடிகின்றது. இந்த ரீதியில் சராசரி ஒரு ரூபா மீதப்படுத்தினலும் கூட, வருடத்தில் 300/= ரூபாவைச் சேமிக்கமுடியும். சேமிக்கும் நிலையைத்தான் பிரபலபொருளாதாரத்துறை வல்லுநர்கள் பொருளாதாரசுபிட்சமென வர்ணிக்கின்றனர். இன்று சேமிக்கும் நிலை எமது தொழிலாளரிடையே இல்லை. உண்பதும் உடுப்பதும் தவிர வேறெதற்கும் வருமானம் போதியதாயில்லை.

## பொதுவிஷயம்.

எமது சமூக நலன் கருதியும், கிராம நலன் கருதியும் பல பொது விஷயங்களை நாம் கவனிக்க வேண்டியவர்களாயுள்ளோம். தற்போது சராசரி ஒருவர் வருடத்தில் 50/- ரூபா வரை பொது விஷயங்களுக்காய்ச் செலவிடவேண்டியிருக்கிறது. எத்தனையோ நிர்ப்பந்த நிலைகளிலும் பொதுச்செலவுகளில் எமது கிராமத்திலுள்ளார் பெரிதும் ஒத்துழைத்தே வருகின்றனர். உள்ளூரில் ஒரு தொழிற்சாலை அமைந்து கருமம் செய்யுமேயானல், எமது சமூக, கிராம வளர்ச்சிக்காய் எத்தனையோ அரும் பணிகளை ஆற்றலாம். எமது கிராமத்திலே பல நல்ல கருமங்கள் நடைபெறுகின்றன. பணம் கொ

டுத்துதவுகிறோம். ஆனால் பெரும்பாலான விஷயங்களில் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. காரணம் பிறதேசத்திலே பெரும்பாலும் எமது காலம் கழிந்துகொண்டிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும்.

## தன்கையே தனக்குதவி.

ஒரு சில முதலாளிகளை நம்பி வாழும் தொழிலாளிகள் பல கஷ்டங்களையுமனுபவிக்க வேண்டியதாயிருக்கிறது. ஒழுங்காகவும், நிரந்தரமாகவும் உற்பத்தி செய்யக் கூடிய பெரும் மூலதனத்தை யிட்டு தொழிலை நடத்தும் முதலாளிகள் நம் நாட்டில் இல்லை. வெறும் அநுபவத்தை மட்டுமே துணைகொண்டு, சாஸ்திர ரீதியைப் புறக்கணிக்கும் ஒரு சிலர் கையிலே பல தொழில் ஸ்தாபனங்கள் அகப்பட்டு விட்டமையாலும் மிக மிகக் கஷ்டப்படுகிறான் தொழிலாளி. உற்பத்தி பெருகியவுடன் அவற்றை விற்றுத் தீர்க்கத் திட்டமில்லாத முதலாளி உடனே உற்பத்தியை நிறுத்திவிடுகிறார். தொழிலாளரின் கதியைப்பற்றி அவர் சிந்திப்பதேயில்லை. தினசரி மூன்று ரூபா செலவு செய்து பட்டினங்களிலே யாதொரு வருவாயுமின்றி, மறுபடி வேலை கிடைக்கும்வரை சுற்றித் திரிகிறான் தொழிலாளி. திரும்ப வேலை கிடைத்ததும் வேலையின்றி இருந்த நாட்களில் ஏற்பட்ட செலவுக் கடனை இறக்க வேண்டியதாயிருக்கிறது முதலில். இந்த நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது. இப்படி ஒழுங்கற்ற உற்பத்தியை நடத்தி தொழிலாளியோ, அன்றி முத

லாளியோ பொருளாதார சுபிட்சமடைய ஒருகா லும் முடியாது.

எனவே தொழிலாளர் அனைவரும் ஒன்று சேர்ந்து தமக்குத்தாமே முதலாளியாகவேண்டும். பலதுளி பெரு வெள்ளமாய் ஒரு பெரும் மூலதனத்தைச் சேர்த்து திட்டம்வகுத்துச் செய்தால் தொழிலாளி யின் பொருளாதார நிலையை நன்கு வளம்பெறச் செய்ய முடியும்.

இலட்சக்கணக்கிலே தமது சொந்தப் பணத் தைப் போட்டு எமக்கு நல்வாழ்வளிக்க யாரும் வர மாட்டார்களா? என நாம் ஏங்கிக் கிடப்பதால் எந்தவித பிரயோசனமுமேற்படாதென்பது உறுதி. "தன்கையே தனக்குதவி" எனத் தீர்மானித் துச் செயலாற்ற வேண்டும்.

வெண்காயச்சங்கம், வாழைக்குலைச்சங்கம், சுருட்டுத் தொழிற்சங்கம் பீடித் தொழிற்சங்கம், தையல் தொழிற்சங்கம், என எத்தனையோ தொ ழில்களெல்லாம் சங்கமாய்த் திரண்டு நடைபெறும் பொழுது நாம்மட்டும் வாழாவிருப்பதா?

"தோட்டக்காட்டான்" என எம்மால் பழிக் கப்படும் தோட்டத் தொழிலாளர் பலர் ஒன்று சேர்ந்து தோட்டமொன்று வாங்கி ஐக்கியமுறை யில் நடத்துகிறார்கள் என்றால் நாம் பிரமிப்படைய வேண்டும்! எனவே ஒற்றுமையும், நல்லெண்ண முமிருந்தால் நாமும் வெகு எளிதில் காரியத்தைச் சாதிக்கலாம்.

*எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர்*
*திண்ணியராகப் பெறின்.* என்பது தமிழ்மறை.

## கூட்டுப் பண்ணை

தொழிலாளிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்தால் குறிப்பிட்டளவு மூலதனத்தைத் திரட்டிவிடலாம். ஆனல் பங்காளிகளிடையே ஒற்றுமை மனப்பான்மையும், நல்லெண்ணமும், சந்தேகமின்மையும், உற்சாகமும், எதிர்காலத்தில் உறுதியான நம்பிக்கையும் வேண்டும். இது எனது தொழிற்சாலை என்ற எண்ணம் வேண்டும். செயலாற்றுவோரைச் சந்தேக நோக்குடன் பார்க்கக் கூடாது. அமைத்த திட்டங்களைச் சரிவர நடத்தி முடிக்க சௌசன்யமான ஒத்துழைப்புவேண்டும். இது ஒரு குடும்பம் என்ற எண்ணம் வேண்டும். "நானும் ஒரு பங்காளன் எனக்கு வேலை கொடுக்கவில்லையே" என்ற தப்பெண்ணமே யிருக்கக் கூடாது. ஏனெனில், மூல தனத்துக்குத் தக்கதாகவே தொழிலாளிகளை வைத்து உற்பத்திசெய்ய முடியும். உதாரணமாகச் சப்பாத்துவேலையை எடுத்துக்கொள்வோம். ஒரு தொழிலாளியால் 2 சோடி சப்பாத்து முடிக்க இயலும். 5 பேர் வேலை செய்வதாயிருந்தால் 10 சோடி சப்பாத்து உற்பத்திசெய்யலாம். மேற்படி பத்துச் சோடிகளையும் உற்பத்தி செய்ய மூலப்பொருட்கள் கூலி முதலியவற்றுக்காய் தினம் சுமார் 120/- ரூபா வேண்டும். ஆகவே 25 நாட்கள் வேலை நடைபெறும். ஒருமாதத்துக்கு 3000 ரூபா வேண்டும். நிலுவை கொடுத்தும், தார

இடங்களுக்கு அனுப்பியும் வியாபாரம் செய்ய வேண்டியிருப்பதால் பணம் வரச் சுணக்கமேற்படலாம். கூடுதலாய்த் தொழிலாளரை நியமித்தால், அதேவேலையை 10 பேர் 12 நாட்களில் முடித்துவிடலாம். மிகுதிநாட்கள் வேலையின்றியே இருக்கவேண்டும். இதனுல் தொழிற்சாலைக்கும் தொழிலாளருக்கும் பெரும் நஷ்டம். எனவே மூலதனத்துக்கேற்ப ப்படிப்படியேதான் தொழிலாளரின்தொகையைக் கூட்டுதல்வேண்டும். அரசாங்க உதவியைப் பெற்றுமென்மேலும் அபிவிர்த்திகள் ஏற்படும்பொழுது எமது கிராமத்திலுள்ள தொழிலாளிகளே போதாமற் போகலாம்.

## உற்பத்தி.

பாதரட்சையிலே இன்று நாற்பதுக்கு மேற்பட்ட பல்வேறுன இனங்களை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. ஆனுல் எமது மூலதனத்துக்குத் தக்க விதமாகவே இனங்களைத் தெரிவு செய்ய வேண்டும். உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நல்ல தொழிலாளிகளாலும் திறமான மேற்பார்வையாளராலும் செய்யப்படவேண்டும். வெளியூரிலிருந்து இறக்குமதி பண்ணப்படும் சாமான்களுக்கு இணையாயிருக்கவேண்டும். தினசரி உற்பத்தியாகும் பொருட்களைப் பெட்டிகளிலடைத்துப் பக்குவப்படுத்தி விடவேண்டும். கூடியவரை சாமான்கள் தரம் கெடாத முறையில் உற்பத்தி செய்வது கஷ்டமான செயலன்று. நிர்வாகிகளும், தொழிலாளிகளும் நன்கு ஒத்துழைக்கவேண்டும்.

## விற்பனை.

இலங்கை முழுவதும் சுமார் 500 க்கு மேற்பட்ட கடைகளில் பாதரட்சை விற்பனையாகிறது. பிரயாண விற்பனையாளர்களை அமர்த்தி எங்கும் சென்று ஆர்டர்கள் சேகரிக்கவேண்டும். எமது வியாபார அடையாளத்தைப் பாவிப்பாளரிடையே நன்கு விளம்பரஞ்செய்தால், எமது உற்பத்திகளை மக்கள் கடைகளிற் சென்று விசாரிப்பர். ஊக்கமுள்ள விற்பனையாளர்கள் கண்டிப்பாய் எமது உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தமேற்படும். சுமார் நூறு விற்பனை ஸ்தாபனங்கள் எமது சாமான்களை ஆதரிக்குமானல் குறைந்தபட்சம் மாசத்தில் இருபதினயிரம் ரூபா விற்பனையை எதிர்பார்க்கலாம். ஆனல் ஆரம்பத்திலேயே இவ்வளவு விற்பனையை விரும்பினல் இருபத்தையாயிரம் ரூபாவாவது மூலதனமிருக்க வேண்டும். ஆனல் உடனடியாய் அவ்வளவு மூலதனம் சேருவது பகற்கனவு. படிப்படியாக முயற்சித்தால் பலமடங்கு மூலதனம் சேருவது உறுதி. உதாரணமாய் ஐயாயிரம் ரூபாதான் எமது ஆரம்ப மூலதனமென வைத்துக்கொண்டால், மாசத்தில் சுமார் ஆறுயிரம் ரூபா பெறுமதியான உற்பத்திகளின்மூலம் விற்பனை செய்யலாம். செலவுகளைநீக்கி நிகரலாபம் 5 வீதமாய்க் கணக்கிட்டாலும் மாசம் முன்னூறு ரூபா ஆதாயமாய்க் கிடைக்கிறது. இது ஒரு வருடத்தில் மூவாயிரத்தறுநூறு ரூபா ஆகிறது. வருடந்தோறும் ஆதாயப் பணத்தையும் முதலுடன்

சேர்ப்பதானல் ஐந்தாண்டுகளில் எமது இலக்கான மூலதனத்தை மிக இலகுவாய் ஈட்டிக்கொள்ளலாம். இவை யாவும் வீண் கனவல்ல. சாஸ்திரரீதியான முடிபு. ஆனல் திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமானல் ஐக்கியஉணர்ச்சி பொங்க வேண்டும்.

இந்தத் தொழிற்சாலையிற் கிடைக்கும் ஆதாயம் பெரும்பாலும்தொழிலாளரையேசேருவதால், வருடந்தோறும் ஆதாயத்தைஎடுக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமேற்படாது. ஏனெனில், தொழிலாளருக்குக் கைநிறையக் கூலிகிடைப்பதால், ஆதாயத்தைச் சேமிப்பதில் எதுவித கஷ்டமுமில்லை. ஆனல் விரும்பியவர்கள் வருடந்தோறும் தமக்குரிய ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

## பங்கு.

எமது மூலதன இலக்கு ஐஞ்ஞூறுபங்குகள். பங்கு ஒன்றின் பெறுமதி நூறுரூபா. எனவே மூலதனம் ஐம்பதினுயிரம் ரூபாவாகும். மேற்படி ஐஞ்ஞூறு பங்குகளுக்கு முரிய பணம் ஐந்து ஆண்டுகளுக்குள் செலுத்திவிடவேண்டும். உதாரணமாய் ஒருவர் பத்துப் பங்கை வாங்கியிருந்தால் முதலில் வசதிக்கேற்ப இரண்டு, அல்லது மூன்று பங்குகளுக்குரிய பணத்தைமட்டும் செலுத்தினல் போதும். மிகுதியை ஐந்து வருடங்களுக்குள் செலுத்திவிடலாம். இது மேற்படி தொழிற்சாலையில் பெறும் கூலியைச் சேமித்தும், ஆதாயத்தைச் சேமித்தும் மிக

இலகுவான முறையில் கட்டுவதுக்கேற்ற வசதியாகும். பண வசதியுள்ளோர் வாங்கிய பங்குகளுக்குரிய முழுப் பணத்தையும் செலுத்திவிட்டால் தொழிற்சாலை மின்வேகத்தில் வளர்ச்சியடையுமென்பது திண்ணம். மேற்படி தொழிற்சாலையில் பங்காளியாய்ச் சேர்ந்த ஒருவர், தனக்குப் பங்கு தேவையில்லை என்பதை உணர்ந்தால் வருடமுடிவில் நடைபெறும் வருடாந்தக் கூட்டத்தில் தங்கள் பங்குகளை விற்பனைசெய்து தங்கள் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வேறு பங்காளராயிருந்தாலும் சரி புதியவர்களாயிருந்தாலும்சரி யாராவது பணத்தைச் செலுத்தி விற்பனையாகும் பங்குகளை வாங்கலாம். பங்குகளை விற்பனை செய்ய ஏல முறை கையாளப்படும். இந்தமுறை சில நேரத்தில் பங்கின் பெறுமதியைக் கூட்டவும், குறைக்கவும் செய்யும். இது தொழிற்சாலை நடைபெறும் நீதியைப் பொறுத்தது. உதாரணமாக இலங்கை வங்கியில் (**Bank of Ceylon**) ஒரு பங்கின் பெறுமதி ஆகப் பத்துரூபா மட்டுமே. ஆனல் இன்று ஆயிரம் ரூபா கொடுத்தாலும் கூட ஒரு பங்கு வாங்கமுடியாது.

## பங்காளிகள்.

பங்காளிகள் அனைவரும் மேற்படி தொழிற்சாலையில்தான் வேலை செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஏனெனில் ஆரம்ப மூலதனத்தைப் பொறுத்தே தொழிலாளிகளைச் சேர்த்துக் கொள்ளப்படும். எனவே வேறெங்காவது வேலை செய்யலாம்.

ஆனல் தொழிற்சாலைக்குத் தொழிலாளரின் தேவையும், அவர்களுக்கு ஒழுங்காய் வேலைதரக்கூடிய நிலைமையுமேற்படும் பொழுது, பங்காளராயுள்ள தொழிலாளிகள் கண்டிப்பாய் மேற்படி தொழிற்சாலையிலேயே வேலைசெய்யவேண்டும். விற்பனை ஸ்தாபனங்களை நடத்தும் முதலாளிகளுக்குமட்டும் எந்தவித நிர்ப்பந்தமுமில்லை.

## அரசாங்க உதவி.

எமது மூலதனத்தைப் பொறுத்தும், பங்காளரின் தொகையைப் பொறுத்தும் அரசாங்கம் கடனுதவி செய்யும். மிகவும் குறைந்த ஒரு வட்டி விகிதத்துடன் சிறிது, சிறிதாய்க் கடனை இறுக்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் சிலர் சேர்ந்து ஓர் ஐக்கிய தச்சுத் தொழிற்சாலையை ஆரம்பித்தனர். ஆக இரண்டாயிரம் ரூபாதான் அவர்களுடைய ஆரம்ப மூலதனம். தொழிலாளரின் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கண்ட அரசாங்கம் அந்தத் தொழிற்சாலைக்குப் பதினையாயிரம் ரூபா கடனுகக்கொடுத்து உதவியுள்ளது. இப்படிப் பல தொழிற் சாலைகளும், விற்பனை ஸ்தாபனங்களும் இங்குநடைபெறுவது கண்கூடு. கூட்டுறவு முறையின் வெற்றிச் சின்னமாய் சுளிபுரத்தில்விளங்கும் "மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி" யை நாமனைவரும் நன்கு அறிவோம். எனவே இந்தச் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்த நாம் ஒன்றுபட்டுழைக்கவேண்டும்.

## வதிரி ஐக்கிய சப்பாத்துத் தொழிற்சாலைச் சங்கம்.

மேற்படி பெயருடன் எமது தொழிற் சாலை ஆரம்பிக்கப்படும். சிக்கனத்தை உத்தேசித்து ஆரம்பத்தில் தற்காலிகமான ஒரு கொட்டில் அமைத்தே தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும். எமதுகிராமத்தைச் சேர்ந்த அனைவரும் தங்கள் வசதிக்கேற்றபடி பங்குகளை வாங்கிக்கொள்ளவேண்டும். பின் வரும்திட்டங்கள் அனைத்தும், உடனடியாய் நடைமுறைக்குக் கொண்டுவர அனைவரும் தங்கள், தங்கள் ஒத்துழைப்பைத்தந்து உதவவேண்டும். தொழிற்சாலை பதியப்பட்டு ஆறுமாசங்களுக்கிடையில் அரசாங்க உதவி கிடைக்குமானால் எமது தொழிலாளிகள் பெரும்பாலோர் மேற்படி தொழிற்சாலையிலேயே வேலைசெய்யலாமென்பது எமது துணிபு.

## தொழிற்சாலை அமைப்பு.

முன்னர்க் கூறியதுபோல் ஆரம்பத்தில் தற்காலிகமான ஒரு கொட்டகையில் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும். ஏனெனில் தொடக்கத்திலேயே கட்டடங்களில் முதலை முடக்கக்கூடாது. கட்டடங்களில் முடக்கும் பணத்தை முதலுடன் சேர்த்து விட்டால், அதன் மூலம் கிடைக்கும் ஆதாயத்திலிருந்தே தொழிற்சாலையைக் கட்டிவிடலாம். அன்றியும் தொழிற்சாலை சிவியான் வெட்டையிலேயே அமைக்கவேண்டியிருப்பதால், மிகவும் பாதுகாப்பாயிருக்கவேண்டும். எனவே சிறிது தாமதித்தே கட்டடம் அமைக்கவேண்டும். கட்டட அமைப்பு: தொழிலாளர் வேலைசெய்ய ஒரு நீண்ட ஹால், மெஷின்வேலை

செய்ய ஒரு தனிஅறை. மூலப்பொருள்களுக்கு ஒரு ஸ்ரோர். உற்பத்தியான பொருட்கள் வைப்பதற்கு ஒருஅறை. ஆபீஸ் அறை. கன்ரீன். (தேநீர் அருந்தி சிரமபரிகாரம் செய்வதுக்குரிய அறை) எனத் தனித் தனி இலாக்காக்களாய் வகுக்கப்பட வேண்டும். சுற்றி பாதுகாப்பான மதில் எழுப்பப்படவேண்டும், எனவே கட்டட வகையில் ஐயாயிரம்ரூபாயாவது செலவேற்படும். இந்தச் செலவை ஆதாயத்தைக்கொண்டே ஈடுசெய்யவேண்டும். தொழிற்சாலையின் வளர்ச்சியை ஸ்திரப்படுத்திக்கொண்டே கட்டடம் அமைக்க ஆரம்பிக்கவேண்டும். ஒரு நல்ல இடமின்றி வேலை செய்வது கொஞ்சம் கஷ்டமாகவேயிருக்கும். ஆனல் கொழும்பில் இன்று குச்சு வேலைத்தலங்களாய் உபயோகப்படும் "காம்பரு" க்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இங்குள்ள கொட்டிலில் வேலை செய்வது விசேஷமே. ஆகவே எமது தொழிற்சாலையைக் கற்பனைபண்ணிப் பார்க்கும்போது நாவிற் சலமூறுகிறது. ஒன்றுபட்டால் இது ஒரு பிரமாதமல்ல. ஒருவருடத்திலேயே சாதிக்கமுடியும். இந்த மாபெருந் தொழிற்சாலையால் எமது கிராமத்துக்கு அரசாங்கத்தால் ஒரு தனி மதிப்பேற்படும்.

பின் வரும் திட்டங்களனைத்தும் படிப்படியாகவே நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். திட்டங்கள் அனைத்தும் நடைமுறைக்குக் கொண்டுவந்த பின்னரே எமது தொழிற்சாலை பூரண நிலையை அடையும். காலத்துக்கேற்றவிதமாயும், அரசாங்க விதிகளுக்கமையவும், சில விதிகள் கூட்டவும், குறைக்கவும்படும்.

எம். எஸ். எஸ். கிருஷ்ணசேகரன்
26-3-85.



1. ஆரம்பத்தில் விரைவில் விற்பனையாகக்கூடிய தூஸ் மொசேசன், சாண்டில்ஸ், செருப்பு என்பவற்றை மட்டுமே உற்பத்தி செய்யவேண்டும்.

2. தொழிலாளர்களின் தொகைக்கேற்ப "போர்மன்" களை நியமித்து உற்பத்திகளில் கண்ணாயிருக்கவேண்டும். வேலைப் பிழைகளுக்குப் போர்மனே உத்தரவாதி.

3. அன்ருடம் முடிக்கக்கூடிய வேலையையே ஒவ்வொரு தொழிலாளிக்கும் கொடுக்கவேண்டும்.

4. கடதாசி மட்டையில் கவர்ச்சிகரமான பெட்டிகள் தயாராயிருக்கவேண்டும். சாமான் முடிந்ததும் பெட்டிகளிலடைத்துப் பக்குவப்படுத்திவிடவேண்டும்.

5. ஒரு இனத்தை இருவருக்கு மேற்பட்டோர் செய்யவேண்டியதிருந்தால் கூடியே வேலைசெய்ய ஒழுங்குசெய்யவேண்டும். அப்பொழுதுதான் உற்பத்தியாகும் பொருட்கள் அனைத்தும் ஒரேமாதிரியாயிருக்கும்.

6. அடிக்கடி மாதிரிகள் (பெற்றன்) மாறிக்கொண்டுபோகும் சாமான்களை ஆடரின்றி உற்பத்தி செய்யக்கூடாது.

7. துண்டுத் தோல்கள் சேதாரமாகாதவண்ணம் எந்தெந்த முறையில் உபயோகிக்கலாமோ அந்தந்த முறைகளைக் கையாளவேண்டும்.

8. உற்பத்தியாகும்பொருட்களை இனவாரியாய்க் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும்.

9. விற்பனை கூடினுல் உற்பத்தியும் பெருகவேண்டும். எனவே யந்திரசாதனங்களை உபயோகித்து உற்பத்தியைப் பெருக்கமுயற்சிக்கவேண்டும்.

10. ஆக்ரு, கல்கற்று, கான்பூர் முதலிய இடங்களுக்கு, ஒருவரை அனுப்பி அங்கு நடைபெறும் உற்பத்தி முறைகளைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

11. உற்பத்தியைப் பெருக்க வேறு என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் செய்யவேண்டும்.

## விற்பனைத் திட்டம்.

1. உற்பத்தியிலீடுபடும் ஒரு தொழிலாளிக்கு மூலப்பொருள், கூலி என்பவற்றுக்காய் ,ரூபா முப்பது தினசரிவேண்டும். எனவே பத்துப் பேரை ஆரம்ப தொழிலாளராய்க் கொண்டு தொழிற்சாலை தொடங்குவதாயின் தினம் முன்னூறு ரூபா வேண்டும். எனவே சுறுசுறுப்பான விற்பனையின்மூலம் உற்பத்தி தாமதியாது நடைபெறச் செய்யவேண்டும்.

2. பல தினிசுகளிலும் சாம்பிள் செட் ஒன்றைத் தயாரித்து, இரண்டாய்வகுத்து இரண்டு கன்வஸ்ஸர்களிடம் கொடுத்துப் பல இடங்களுக்கும் அனுப்பி ஆடர்கள் எடுக்கவேண்டும்.

3. ஆடர்களை உடனுக்குடன் V. P. P. மூலம் அனுப்ப முயற்சிக்கவேண்டும். பொறுப்புள்ள இடங்களுக்கு மொத்தமாய்க் கொடுத்து, தவணைக்குத் தவணையும் பணத்தை அறவிடலாம்.

4. உற்பத்தி செய்யும் சாமான்களின் தரத்தை உயர்த்தி, கூடியளவு விலையைக் குறைத்து ஜனங்கள் உபயோகப் படுத்தக்கூடிய வழி செய்யவேண்டும்.

5. கன்வஸ்ஸர்களுக்கு சம்பளத்துடன் கமிசனும் தரப்படவேண்டும்.

6. எமதுவியாபார அடையாளமாய் "கோப்பறேஷன்" என்றபெயரைப் பரவச்செய்து எமது உற்பத்திகளுக்கு நாட்டில் செல்வாக்கையுண்டுபண்ண வேண்டும்.

7. உள்ளூரில் சுதேசப் பொருட்களைப் பாவிக்குமாறும், ஆதரிக்குமாறும் பலவிதமான பிரசாரங்களையும் செயயவேண்டும்.

8. கொழும்பில் ஒரு விற்பனை ஸ்தலமமைத்து (காம்பருவாயினும் சரி) தென்னிலங்கைப்பகுதிக்கு விநியோகம் செய்யவேண்டும். மேற்படி விநியோகஸ்தாபனத்தை வியாபாரிகள் அனைவரும் அறியக்கூடியதாய் நல்ல விளம்பரம் செய்ய வேண்டும். இந்தஸ்தாபனத்தின் மூலமே கொழும்பில் மூலப்பொருட்கள் (தோல் வகை) கொள்வனவு செய்வதையும் கவனித்துக் கொள்ளலாம்.

9. கொழும்பில் மொத்தவியாபாரிகளுக்குச் சாமான் கொடுக்காது, சில்லறை வியாபாரிகளுக்கே கொடுக்கவேண்டும். எமது சாமான்களை விற்பனைசெய்யும் கடைகளைப் பத்திரிகைகளில் பிரகடனப்படுத்தவேண்டும்.

10. கொழும்பு ஸ்தாபனத்துக்கு ஒரு மனேஜரும், விற்பனையாளரும், உதவியாளருமாக மூவர் தேவைப்படும். மிகவும் அனுபவம்பெற்ற திறமைசாலிகளையே மேற்படி வேலைகளுக்குத் தேர்ந்தெடுக்கவேண்டும். இவர்களுக்குச் சம்பளத்துடன் 1 வீத விற்பனைக் கமிசனும் கொடுக்கவேண்

டும். அப்பொழுதுதான் ஊக்கமான உழைப்பை அவர்களிடம் பெறலாம்.

11. வசதியேற்படும்பொழுது "வான்" மூலம் விற்பனையைத் துரிதப்படுத்த வேண்டும்.

12. கண்டிப்பாய் "ஒரேவிலை" முறையை அநுசரிக்க வேண்டும்.

13. எமது வியாபாரத்தலங்களை விநியோக ஏஜெண்டுகள்போல் பாவித்து பற்று, வரவு செய்ய வேண்டும்.

14. இவ்வாறு நாம் முயன்றுவருவதை அரசாங்கத்துக்குப் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டி இறக்குமதிகளுக்குத் தீர்வையைக் கூட்டச் செய்யவேண்டும்.

15. இன்று எமது தொழிலில் மந்தநிலை ஏற்பட்ட காரணம் நாமேதான். சரியான திட்டத்தில் தகுந்த முறைகளைக் காலத்துக் கேற்றபடி புகுத்தத் தவறிவிட்டோம். எனவே தன் நம்பிக்கையுடன் செயல் புரியவேண்டும்.

## தொழிலாளர்.

1. காலை 8 மணிக்கு வேலை ஆரம்பித்து மாலை 5 மணிக்கு நிறுத்தி விடவேண்டும். மத்தியான போசனத்துக்காய் ஒரு மணித்தியாலம் லீவு தரப்படும்.

2. ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் தினசரி 8 மணித்தியாலங்கள் வேலை செய்யவேண்டும்.

3. லீவு தேவைப்படும்போது மனேஜருக்கு 2 நாட்களுக்கு முன்னரே அறிவித்து விட வேண்டும்.

4. ஒவ்வொருநாளும் தாங்கள் செய்யும் வேலையை போர்மனிடம் ஒப்படைத்துக் கணக்கெழுதிக்கொள்ள வேண்டும்.

5. வாரந்தோறும் சம்பளம் கணக்கிட்டுக் கொடுக்கப்படும்.

6. வாரந்தோறும் ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு ரூபா "தொழிலாளர் நிதி" க்கு உதவ வேண்டும். இந்த நிதியிலிருந்து தொழிலாளரின் அவசிய தேவைக்குப் பணம் கொடுக்கப்படும்.

7. தபாற்கந்தோர் சேமநிதி வங்கியில் பணம் சேமிக்க விரும்புபவர்களுக்கு உதவியளிக்கப்படும்.

8. வாசிகசாலையில் 7 மணி தொடக்கம் 8 மணி வரை ஆங்கிலபாடம் இலவசமாய்ப் போதிக்கப்படும். விரும்பியோர் சேர்ந்து படிக்கலாம்.

9. ஒவ்வொரு மாசந்தோறும் நடைபெறும் நிர்வாகசபையில் அனைவரும் கலந்து அந்தந்த மாச உற்பத்தி, விற்பனைநிலைமையை அறிந்து கொள்ளவேண்டும்.

10. பிற இடங்களிலே வியாபார ஸ்தாபனங்களை ஆரம்பிக்க விரும்பும் தொழிலாளருக்கு கூடியளவு சாமான்கள் கொடுத்துதவுவதுடன் வியாபார சம்பந்தமான எல்லாயோசனையுமளிக்கப்படும்.

11. எவ்வளவு பயிற்சி பெற்ற தொழிலாளியாயினும்சரி, போர்மன் சொற்படி கேட்கவேண்டும்.

12. நிர்வாகிகளுடன் ஒவ்வொரு விஷயத்திலும் ஒத்துழைத்து, தொழிற்சாலை அபிவிருத்தியில் நாட்டம் செலுத்தவேண்டும்.

அமெரிக்காவில் ஒருவருடைய சராசரி வருடானம் எண்ணூறுரூபா. ஆனால் இலங்கையிலே ஒருவருடைய சராசரி வருமானம் இருபத்துநாலுரூபா தான்.

## முடிவுரை.

எத்தனையோ நூறு ரூபாய்களை வீண்விரயம் செய்திருப்போம். எனவே நூறு ரூபாவைப் பெரிதாயெண்ணாது உடனடியாய் ஒரு பங்கிலாவது சேர்ந்து திட்டங்களைத் திறம்பட நடத்த உதவ வேண்டும். இந்த நூறு ரூபாவால் ஏற்படக்கூடிய நலன்களையெல்லாம் முன்னுக்கு விபரமாய்ப் படித்திருப்பீர்கள். தொழில்துறையில் முன்னேறியதாலேயே இன்று மேனாடுகள் செல்வங் குவித்துச் செல்வாக்குடன் முன்னணியில் நிற்கின்றன.

தொழில் செய்யும் சக்தி குன்றிய பிற்காலத்தை இந்த நூறு ரூபாய் பங்குக்கு கிடைக்கக்கூடிய ஆதாயத்தைக் கொண்டே நிர்வகிக்கக்கூடியதாயிருக்கும். "தேசப்பணியே தெய்வப்பணி" ஆகவே ஒரு தொழிற்சாலையின் அவசியத்தைப்பற்றிச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவான விளக்கம்தரப்பட்டுள்ளது. பயன்படுத்துவது ஒவ்வொருவரின் கடமையுமாகும். தனிமரமாகவளருவதைக்காட்டிலும் தோப்பாக பல(மரக்கூட்டம்) வளருவதே பெருமைக்குரியது. ஏழையென்றும், அடிமையென்றும் எவனுமில்லை எமது கிராமத்தில் என்று நாம் மார் தட்டவேண்டும்.

"சேர்ந்த பணம் முடியும்வரை ஏதோ கொஞ்சம் நடக்கும் பிறகு எல்லாம் மட்டமாய்விடும்." என்று ஒருசிலர்

இப்பொழுதே பேச ஆரம்பித்துவிடுவர். இது சகசம். புதிய அபிப்பிராயங்களிலே தங்களுக்குள்ள சந்தேகத்தினால் மக்கள் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பது இயல்பு. ஆனால் இன்று உலகமெங்கிலும் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக இந்த முறை வெவ்வேறு துறைகளிலே அநுஷ்டானத்திலிருந்து வருவதை அனைவருமறிவோம். புதியன புகுதலை எதிர்க்க ஒரு கூட்டம் என்றும் இருந்துகொண்டேயிருக்கும். அதற்காக நாட்டில் புதிய விஷயங்கள் பரவாதிருக்கிறதா? "நாம் அனைவரும் நம் கிராமத்திலேயே தங்கிவிட்டால், இப்பொழுது கொழும்பில் நடைபெறும் குட்டி வேலைத்தலங்களைப் பிறர் கவீகரித்துக்கொண்டு திறம்பட நடத்தினால், அவ்விடத்து விற்பனையை நாம் இழந்துவிடுவோம்" என்பது ஒரு சாராரின் வாதம்.

தனிப்பட்ட இரண்டு, மூன்று வியாபாரிகளை நம்பியே கொழும்பிலுள்ள வேலைத்தலங்கள் நடைபெறுகின்றன. அங்கு பெரும்பாலும் கீழ்த்தரமான சாமான்களே உற்பத்தியாகின்றன. குறைந்த விலைப் பொருட்களும் ஒரு சாராருக்குத் தேவைப்படுவதால் அந்த வேலைத்தலங்கள் சில நடைபெறவே செய்யும். இப்பொழுது அப்படியான வேலைத்தலங்களை நடத்தும் ஒரு சிலர் தொடர்ந்து நடத்தவே செய்வார்கள். அதனால் எமக்கு எவ்வித நஷ்டமுமேற்படாது.

"தொழிற்சாலை கொழும்பில்தான் அமைக்க வேண்டும் என ஒரு சாரார் கூறுவர்.

னல் காலகெதியில் ஐக்கியம் முறிந்து மறுபடியும் இன்றுள்ள நிலைதான் ஏற்படும். அல்லாமலும் எமது கிராம வளர்ச்சி, தொழிலாளர் நலன், சமூக நலன் அனைத்தும் ஏற்பட உள்ளூர்த் தொழிற் சாலையே உதவும். முற்பகுதியில் விளக்கியிருப் பதை நன்கு சிந்தித்துப்பாருங்கள். அன்றியும் தாமஸ்பாட்டா சப்பாத்துத்தொழிலை ஆரம்பிக்கத் தன்னுடைய தாய்நாடாகிய செக்கோஸ்லேவிகியா வின் தலைநகரான பிரேக்சுக்குப் போகவில்லை. தன்னுடைய சிறு கிராமமாகிய ஸ்லின் என்பதில் தான் தொழிலைத் துவக்கினர். விரைவில் அவரது கிராமத்தார் அனைவருமே அந்தத் தொழிற்சாலை யில் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டனர். அதன் கா ரணமாய் அந்தக் கிராமமே ஒரு பெரிய நகரமாக மாறிவிட்டது.

எனவே காங்கேசன்துறை தொடக்கம் தெய்வந் துறை வரை பரந்து கிடக்கும் முழு இலங்கையிலும் எமது உற்பத்திச்சாமான்கள் விற்பனையாக வேண்டும். நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளிகளும், அவர்களைச் சேர்ந்த பிறரும் பல நலமும் பெறவேண்டும். குடும்பங் கள்யாவும் மகிழ்ச்சி பொங்கவேண்டும் நாடு நகரமாக வேண்டும். வீடு சுவர்க்கமாக வேண்டும். இதுவே எமது ஆசை. இதுவே எமது இலட்சியம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

வணக்கம்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொல் லருளீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்
எதுவும் நல்கி எவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்.

(பாரதியார்)